[2009 ஜூலை 21

(அஏ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஆதனூரில் மேம்பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மானியக் கோரிக்கை விவாதத்தின்போதும் கேள்வி நேரத்தின்போதும் நான் அடிக்கடி கேட்டு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்ற ஒரு நிகழ்வு ஆதனூர் மேம்பாலம் பற்றியது. ஆதனூரில் மேம்பாலம் அமைப்பதைப்பற்றி பல முறை திட்டமிட்டார்கள்; தொகையை ஒதுக்கீடு செய்தார்கள்; அது போதவில்லையென்று cancel செய்தார்கள்; கடைசியாக NABARD—ன்மூலம் 72 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தார்கள்; மறுபடியும் அது cancel செய்யப்பட்டு, மறு ஆய்வுக்குச் சென்றது. இப்படிப்பட்ட நிலையில் அது அந்த யூனியன் செய்ய வேண்டிய வேலையா அல்லது நெடுஞ்சாலைத் துறை செய்ய வேண்டிய வேலையா என்கின்ற சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில், அந்த ஆதனூர் மேம்பாலம் கட்டப்படாததால், மழைக்காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரி திறந்து விடப்படும்போதெல்லாம் வெள்ளப்பெருக்கு அதிகமாக இருக்கும்போது, அதில் நிறைய பாம்புகள் அடித்து வரப்பட்டு, கிராமங்களுக்குள்ளே படையெடுத்து வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சரவர்கள் தயவுசெய்து இந்தப் பிரச்சினையைக் கனிவோடு கவனத்திலே கொண்டு, ஆதனூர் மேம்பாலத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து இந்த அவையிலே எழுப்பிய நேரத்தில், அது ஊராட்சி ஒன்றியச் சாலை என்பதால், நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்குகின்ற நிதியிலிருந்து நேரடியாக இப்பணியைச் செய்ய இயலாது என்று தெரிவித்தேன். ஏனென்று சொன்னால், தணிக்கைத் துறையில் அதற்கு ஒப்புதல் கிடைக்காது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர்

2009 ஜூலை 21] [திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்]

அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற அரசு பரிசீலிக்கும்.

(அஐ) அரக்கோணம் எம்.ஆர்.எப். ஆலைத் தொழிலாளர் பிரச்சினை மற்றும் சோளிங்கர் யோக நரசிம்மர் கோயிலுக்கு ரோப் கார் வசதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

திரு. அருள் அன்பரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட அரக்கோணம் எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் நிருவாகத்திற்கும், அங்கிருக்கின்ற அங்கீகரிக்கப்படாத சில சங்கங்களுக்கும் இடையே நீண்டகாலமாக பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்குகூட ஒன்று நிலுவையிலே இருக்கிறது. இந்நிலையில் நேற்றுகூட அவர்கள் மறியலில் ஈடுபட்டார்கள். ஏறத்தாழ 1,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அங்கே பணிபுரிகின்றார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய பிரச்சினையைக் கனிவோடு கண்டறிந்து, அந்த நிருவாகத்திற்கும் சங்கங்களுக்கும் இடையே ஒரு தீர்வை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்காக கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து முக்கியமான இந்த இரண்டு பிரச்சினைகளை வைக்கிறேன்.

சோளிங்கர் யோக நரசிம்மர் ஆலயத்திற்கு ஒரு Rope Car–ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தால், கண்டிப்பாக யோக நரசிம்மருடைய முழு அருள் அவருக்குக் கிடைக்கும். (சிரிப்பு) எனவே, அவருடைய அருள் கிடைக்க Rope Car–ஐ அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

(அஒ) வேலூர் மாவட்டம், தோல் தொழில் கழிவுநீரைக் கடலில் கலக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.